**செய்தி வெளியீடு எண்: 13/2025** **நாள்: 06.02.2025**

**பத்திரிக்கைச் செய்தி**

**சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்-2ல் திருமங்கலம் MVN நகர், நந்தனம் மற்றும் ஆயிரம் விளக்கு ஆகிய நிலையங்களில் உள்ள இடங்களில் வணிக மேம்பாட்டிற்கான விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்கான ஒப்பந்தம் கையெழுத்தானது**

திருமங்கலத்தில் MVN நகர், நந்தனம் மற்றும் ஆயிரம் விளக்கு ஆகிய இடங்களில் வணிக மேம்பாட்டிற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல், சாத்தியக்கூறு ஆய்வு, சந்தை பகுப்பாய்வு, பரிவர்த்தனை ஆலோசனை, கருப்பொருள் திட்டங்கள், நிலப் பயன்பாட்டு அறிக்கை போன்றவற்றை சென்னை பெருநகர வளர்ச்சி ஆணையம் / பெருநகர சென்னை மாநகராட்சியிடம் ஒப்புதலுக்காக ஆவணங்களை சமர்ப்பித்தல், செலவு மதிப்பீடு தயாரித்தல் மற்றும் ஒப்பந்த ஆவணங்களைத் தயாரித்தல் போன்ற பணிகளுக்கான ஒப்பந்தம் இன்று (06.02.2025) கையெழுத்தானது. இந்த ஒப்பந்தம், M/s Aarvee Associates Architects Engineers & Consultants Pvt Ltd மற்றும் M/s ANAROCK Property Consultants Pvt Ltd ஆகிய கூட்டு நிறுவனத்திற்கு ரூ.41.87 லட்சம் மதிப்பில் வழங்கப்பட்டது. இதற்கான ஏற்பு கடிதம் (LOA) 20.12.2024 அன்று வழங்கப்பட்டது.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் திட்ட இயக்குநர் திரு.தி.அர்ச்சுனன் அவர்களின் முன்னிலையில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் சார்பாக தலைமை பொது மேலாளர் திருமதி. ரேகா பிரகாஷ், (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு), மற்றும் Aarvee Associates Architects Engineers & Consultants நிறுவனத்தின் சார்பாக இணை துணைத் தலைவர் திருமதி.ஜே.கே.நந்தனா, ANAROCK Property Consultants நிறுவனத்தின் துணைத் தலைவர் திரு.எஸ்.வினோத் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இந்நிகழ்ச்சியில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மற்றும் ஒப்பந்ததாரர்கள் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், திருமங்கலம் MVN நகர், நந்தனம் மற்றும் ஆயிரம் விளக்கு ஆகிய இடங்களில் வணிக வளர்ச்சிக்கான முக்கிய இடங்களைக் கண்டறிந்து பயணச்சீட்டு வருவாயை தவிர்த்து கூடுதல் வருவாயை ஈட்டுவதற்கான முயற்சிகளை திட்டமிட்டுள்ளது. MVN நகரில் உள்ள வணிக மேம்பாடு, விரைவில் அமையவுள்ள திருமங்கலம் மெட்ரோ நிலையத்தின் நுழைவு மற்றும் வெளியேறும் பகுதிகளுடன் தடையின்றி இணைக்கப்படும்.

நந்தனத்தில் உள்ள வணிக மேம்பாடு பகுதிகள் தற்போதுள்ள மெட்ரோ நிலையத்திற்கு அருகிலும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமை அலுவலகம் மெட்ரோஸ்க்கு எதிரேயும் அமைந்துள்ளன. ஆயிரம் விளக்கு மெட்ரோ நிலைய வணிக மேம்பாடு கட்டம் 1 மற்றும் கட்டம் 2 மெட்ரோ இரயில் நிலையங்களுடன் ஒருங்கிணைக்கப்படும். இறுதி விரிவான திட்ட அறிக்கை மார்ச் 2025-க்குள் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**